IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
OS.No.– 293/2009

DEPOSITION OF WITNESS – PW 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்பையா | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | ராமசாமிதேவர் | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 19.08.2025 in accordance with the provisions of Act XX141.**

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 3ம் வாதி மற்றும் வாதி தரப்பு 2 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

<u>குறுக்கு விசாரணை</u>

1. 1ம் வாதி வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அவரது சாட்சியத்தில் என்ன கூறியுள்ளாரோ அதைதான் நானும் சாட்சியமாக கூறுகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ1 எங்களது கிராமத்து சார்பாகத்தான் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 சாட்சியத்தை மீண்டும் நான் ஏன் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்கு தெரிந்ததை கூறுகிறேன். என்ன

பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் கண்மாயிக்கு வரகூடிய கால்வாய் தண்ணீரை உரப்பனூர் கிராமம் மக்கள் பங்கு கேட்பதால் அவர்களுக்கு பங்கு இல்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

3. நான் பிராது சொத்தில் எதை காண்பித்துள்ளேன் என்றால் எனது நஞ்சை நிலத்தை காண்பித்துள்ளேன். எனது நஞ்சை நிலங்களை பொறுத்து தனித்து பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் கேட்டுள்ள வழக்கு சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

4. நான் கேட்டுள்ள பரிகாரத்தில் வடக்கப்பட்டி கிராமத்தில் உள்ள சர்வே எண்.117 ல் பிரதிவாதியினர் எவ்வித கால்வாயும் ஏற்படுத்த கூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வடக்கம்பட்டி சர்வே எண்.117 உசிலம்பட்டி தாலுகாவிற்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

5. உசிலம்பட்டி தாலுகாவிற்கு கட்டுப்பட்ட சர்வே எண்.117 யை பொறுத்து நான் இந்நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. கருமாத்துார் கிராமம் சர்வே எண்.117 ல் உரப்பனூர் கிராமத்திற்கு பிரிந்து செல்லும் வாய்க்கால் உள்ளது என்றால் சரியல்ல. 6. மேற்படி இடத்தில் மண்மேடு இருந்ததால் உரப்பனூர் கிராமத்திற்கு நீர் வரத்து சரியாக கிடைக்கவில்லை என்று அதனை சரிசெய்ய உரப்பனூர் மக்கள் அரசு அதிகாரிகளை அனுகி நடவடிக்கை எடுத்ததால்தான் தாவா ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர்கள் கால்வாயை பிரிக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

7. தாவா பிரச்சனை குறித்து உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் இருதரப்பு கிராம மக்களை அழைத்து சமரச பேச்சு நடத்தினார் என்றால் சரிதான். அதன் பின்னர் அரசு அதிகாரிகள் இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

8. வருவாய் கோட்டாட்சியர் உசிலம்பட்டி மண்மேடை சரிசெய்ய உரிய நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு பிறப்பித்தார் என்றால் அரசியல் செல்வாக்கால் மேற்படி உத்தரவை பெற்றுள்ளார்கள். மேற்படி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு செல்லாது என்று மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் மேல்முறையீடு சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமான என்றால் தாக்கல் செய்கிறேன்.

9. அதை பார்வையிட்டால்தான் மேல்முறையீடு உள்ளதா என்பது தெரியவரும் என்றால் சரிதான். உரப்பனூர் கிராம மக்கள் அரசு அதிகாரி மூலமாகத்தான் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தமிழக அரசாங்கத்தை தரப்பினராக வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் உரப்பனூர் கிராமத்திற்கு சர்வே எண்.117 வழியாக தண்ணீர் செல்வதற்கு உரிமையில்லை என்று நிரூபணம் செய்யும் விதமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

10. என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரமாக எதுவும் இல்லை. மனுவாகத்தான் தாக்கல் செய்துள்ளோம். பிராது கோரிக்கை சம்பந்தமான ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரியல்ல. உரப்பனூர் கிராம மக்களுக்கு இடையூறு கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

11. எனது பிராது பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.19 10:23:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.